<u>சாதாரண கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.10.2020 | **பொருள் எண்** 1<br>கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் கடந்த வருடங்களில் ஏற்பட்ட இயற்கை இடர்பாடுகள் மற்றும் மழைக்காலங்களில் சேதம் ஏற்பட்டுள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.350.00 இலட்சத்திற்கு மூன்று சிப்பங்களாக தேர்வு செய்யப்பட்டு சிறப்பு சாலைகள் (SRP)-2020-2021 திட்டத்தின் கீழ் முழு மான்யமாக பெற்று கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மானம் எண்:-** 784 ஏற்கப்பட்டது |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் (தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைபணிகள்) | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| **A** | | **சிப்பம் - 1** | | | |
| 1 | 11 | செல்வி நகர் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | 100.00 |
| 2 | 5 | ஷா ஆலிம் நகர் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 280.00 | 4.00 | |
| 3 | 5 | ஆயிஷா நகர் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 4 | 13 | மரக்கடை தெற்கு குறுக்கு தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 5 | 4 | ஜன்னத் நகர் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 280.00 | 4.00 | |
| 6 | 7 | முகம்மதியா தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 250.00 | 4.00 | |
| 7 | 12 | ஔவை காலனி தெருவில் பேவர் | 300.00 | 4.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | | | |
| 8 | 5 | அல் அமீன் நகர் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| | | **Total** | **1910.00** | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **B** | | **சிப்பம் - 2** | | | |
| 9 | 6 | குனுக்கடி ரோட்டில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 700.00 | 4.00 | **100.00** |
| 10 | 12 | வள்ளுவர் காலனி தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 11 | 24 | அக்கரை புதுத்தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 12 | 3 | தோட்டச்சேரி தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 13 | 4 | மாதா கோவில் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 200.00 | 4.00 | |
| 14 | 23 | காடுவெட்டி தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 400.00 | 4.00 | |
| | | **Total** | **1900.00** | | |
| **C** | | **சிப்பம் - 3** | | | |
| **15** | **1** | வ.உ.சி காலனி தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | **200.00** | 4.00 | **150** |
| **16** | **23** | நாகங்குடி அம்மன் கோவில் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | **350.00** | 4.00 | |
| **17** | **5** | மேலபணங்காட்டாங்குடியில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை | **200.00** | 4.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி செய்யும் பணி | | | |
| 18 | 11 | பழைய போலீஸ் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 150.00 | 4.00 | |
| 19 | 4 | திருவாரூர் மெயின் ரோடு அருகில் பெட்ரோல் பாங்கு சந்தில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 100.00 | 4.00 | |
| 20 | 8 | பஜனை மடம் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 150.00 | 4.00 | |
| 21 | 5 | லெட்சுமாங்குடி கீழத்தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 150.00 | 4.00 | |
| 22 | 9 | அப்துல் ரகுமான் தெருவில் பேவர் இயந்திரம் கொண்டு தார்சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 900.00 | 4.00 | |
| 23 | 6 | புளியங்குடி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 200.00 | 3.00 | |
| 24 | 12 | சித்தாத்தங்கரை தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 100.00 | 3.00 | |
| 25 | 14 | சின்ன மேல்கொண்டாழி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 200.00 | 3.00 | |
| 26 | 22 | அன்வாரியா குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 100.00 | 3.00 | |
| 27 | 2 | ராஜகோபாலசாமி தோட்டம் குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 100.00 | 3.00 | |
| 28 | 1 | கோரையாறு நடுத்தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 200.00 | 3.00 | |
| 29 | 11 | அப்துல் ஹமீது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 100.00 | 3.00 | |
| | | Total | 3200.00 | | 150.00 |

அலுவலக குறிப்பு

| | | |
|---|---|---|
| | 1. அட்டவணையில் கண்டுள்ள சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இந்நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட 7.010 கிலோ மீட்டர் நீளம் உள்ள நகராட்சி தார்சாலைகள் சீரமைப்பு செய்வதற்கும் சிமெண்ட் சாலைகள் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.350.00 இலட்சத்திற்கு மூன்று சிப்பங்களாக தேர்வு செய்யப்பட்டு சிறப்பு சாலைகள் (SRP)-2020-2021 **திட்டத்தின் கீழ் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் மூலம் அரசிடம் முழு மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்**.<br><br>(ந.க.எண். 958/2020/இ1) | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

**<u>சாதாரண கூட்டம்</u>**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 18.11.2020 | **பொருள் எண் 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 26888/UGSS-2/2018-28 நாள் 29.01.2019இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கூத்தாநல்லூர் நகராட்சியில் 20 KLD கொள்ளளவு கொண்ட IUDM-2018-2019 இன் கீழ் Fecal Sludge Treatment Plant (FSTP) அமைத்திட தெரிவிக்கப்பட்டு கூத்தாநல்லூர் நகர அளவை வார்டு D பிளாக் - 13, நகர அளவை எண் 5/10 கூத்தாநல்லூர் நகராட்சி வார்டு எண் 6 குனுக்கடியில் அமைந்துள்ள Compost Yard இன் தெற்கு பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு மேற்படி பணிக்காக தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.285.00 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பணி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்போது பணி 50% முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மார்ச் 2021 மாதத்திற்குள் முழுவதுமாக பணி முடிவடையவுள்ளதாலும், விரைவில் Fecal Sludge Treatment Plant (FSTP) இயக்கப்படவுள்ளதாலும், அதற்கான கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் ஏற்படுத்தி அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும், அனுமதி பெற்றவுடன் நாளிதழ் மற்றும் அரசிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1695/2018/இ1) | **தீர்மானம் எண்:- 785**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண் 2**<br>மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் 60/செ.ம.தொ.அ/2020 நாள் 07.09.2020**ன்படி இந்நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை தினத்தந்தி நாளிதழ் தொழில் மலர்** 2020, **சிறிய அளவில் விளம்பரம் செய்ய மேற்படி நாளிதழுக்கு உத்திரவு வழங்கவும்**, **விளம்பரத்திற்கான உத்தேச செலவினம் ரூ.**50,000/- **மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.<br>**அலுவலக குறிப்பு** | **தீர்மானம் எண்:- 786**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 1. **மன்றம் அனுமதி வழங்கலாம்**<br>2. **பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்**. (**ந.க.எண்**. 604/2019/**இ**1) | |
| | **பொருள் எண்** 3<br>**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின்** 28.08.2020**ந் தேதிய கடித ந.க.எண்**. 12635/2020/**யு.பி.ஏ**-2-1, **என்ற கடிதத்தில் நகராசி பகுதியிலுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் மூலம் அனைத்து வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு விபத்து காப்பீடு போடப்பட உள்ளதால் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் விபரங்களில் கூடுதல் விபரங்களான வருவாய் ஈட்டுபவரின் விபரங்கள்**, **பரிந்துரைக்கப்பட்டவரின் விபரங்கள் ஆகியவை** 15 **தினங்களில் கணக்கெடுக்கப்பட்டு கணிணியில் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது**. **மேற்படி பணியில் ஈடுபடுத்தப்படும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் கணிணியில் பதிவேற்றம் செய்பவர்களுக்கு அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது**. **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு ஆணை எண்** 170 **நாள்** 27.10.2020**ன்படி ஒரு குடும்பத்திற்கு படிவம் அச்சிடுதல் பணிக்கு ரூ**.5, **தகவல் சேகரிக்கும் பணி ரூ**.5, **தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு ரூ**.5 **என ஆக மொத்தம் ஒரு குடும்பத்திற்கு ரூ**.15 **நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது**. **எனவே இந்நகராட்சி பகுதியிலுள்ள** 2677 **வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு மேற்படி பணியினை செய்ய ஆகும் செலவினம் ரூ**.40155/-**க்கும்**, **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் பகுதியிலுள்ள ஏதேனும் அரசு சாரா அமைப்பு அல்லது ட்ரஸ்ட் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.<br>அலுவலக குறிப்பு<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்**.<br>2. **பொதுநிதியின் கீழ் மேற்படி செலவினத்தை மேற்கொள்ளலாம்**.<br>(**ந.க.எண்**. 134/2019/**எச்**1) | **தீர்மானம் எண்:-** 787<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50-U-2453 ஈப்பு வாகனத்திற்கு புதிய நான்கு டயர்கள் சப்ளை மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளும் பணிக்கு 12.11.2020 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:-** 788<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Wheel World and Tyres Tiruvaur | 33550 |
| 2 | Krishna Tyres Tiruvuar | 34000 |
| 3 | Lakshmi Tyres Tiruvarur | 34250 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள Wheel World and Tyres Tiruvaur என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 964/2020/இ1)

**பொருள் எண் 5**

**தீர்மானம் எண்:- 789**

**அனுமதிக்கப்பட்டது**

இந்நகராட்சிக்குட்பட்ட புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, சுகாதார பிரிவு மற்றும் பொதுப்பிரிவில் குளிர்சாதன பெட்டி பொருத்துவதற்கு தேவையான மின் உதிரிபாகங்கள் வாங்கும் பணிக்கு 23.09.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்தியா எலக்ட்ரிக்கல்ஸ் பைப் கார்ப்பரேஷன் திருவாரூர் மெயின் ரோடு லெட்சுமாங்குடி | 65,000 | 61,125 | 0.45 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | பாரத் ஏஜென்சீஸ் 95, மேலக்கடைத்தெரு கூத்தாநல்லூர் | 65,000 | 61,680 | 0.46 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள இந்தியா எலக்ட்ரிக்கல்ஸ் பைப் கார்ப்பரேஷன் திருவாரூர் மெயின் ரோடு லெட்சுமாங்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.45% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 715/2020/இ1)

| | | |
|---|---|---|
| | | |
| | **பொருள் எண்** 6<br>இந்நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய குளிரூட்டும் நான்கு சாதனங்களை எடுத்து புதிய நகராட்சி அலுவலகத்தில் பொருத்தவும் மற்றும் பழைய குளிரூட்டும் சாதனத்தில் உள்ள பழுதினை சீர் செய்யும் பணிக்கு 23.09.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:-** 790<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி | 25000 | 24950 | 0.20 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை தெற்கு தெரு லெட்சுமாங்குடி | 25000 | 25100 | 0.40 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.20% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 715/2020/இ1)

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2020ல் பேரிடர் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் உடைப்பு ஏற்படும் இடங்களை கண்டறிந்து அதனை மணல் மூட்டைகளை கொண்டு சரி செய்யவும் மற்றும் அதற்கான சிமெண்ட் சாக்குகள், சவுக்கு மர Post களை கொண்டு சரி செய்யவும் ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் அதனை உடனே வாங்கிடவும் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் பணியினை செய்திடவும் ஆகும் மதிப்பீடு ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணியினை உடன் துவக்க வேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியிலோ அல்லது பேரிடர் மேலாண்மை திட்டத்திலோ மேற்கொள்ளலாம். | **தீர்மானம் எண்:- 791**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.10.2020 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது அக்டோபர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 792**<br>ஏற்கப்பட்டது |
| 29.10.2020 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது அக்டோபர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 793**<br>ஏற்கப்பட்டது |
| 29.10.2020 | **பொருள் எண் 3**<br>நகராட்சி நிர்வாக ஆணையரக ந.க.எண். 7366/2016/யு.பி.ஏ நாள் 18.12.2019ல் அறிவுறுத்தியபடி கூத்தாநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு Vending Certificate Multi colour Washable Scratch Free Certificate தயார் செய்து வழங்க கடந்த 13.03.20ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி 16.03.20ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Sri Mangadu Kamatchiamman Business Corporation, Chennai என்கிற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்க்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி 26.03.20ல் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று 27.03.20ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி நிறுவனம் 103 எண்ணிக்கை Vending Certificate தயார் செய்து அனுப்பியும் அதற்கான தொகை ரூ.20054 வழங்க வேண்டியும் பில் பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். ஏற்கனவே, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி ஏற்று, பணி உத்தரவு வழங்கியமைக்கும், பணி உத்தரவில் அனுமதிக்கப்பட்டவாறு 103 சான்றிதழ்களுக்கு, சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.165+GST வீதம் Sri Mangadu Kamatchiamman Business Corporation, Chennai என்கிற நிறுவனத்திற்கு தொகை ரூ.20054 வழங்கிடவும், செலவினத்தை மேற்படி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திட்ட நிதியிலிருநது செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1887/2014/எப்1) | **தீர்மானம் எண்:- 794**<br>ஏற்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள்காப்பிட்டுத் திட்டம் மூலம் அனைத்து வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு விபத்து காப்பீடு போடப்பட உள்ளதால் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் விபரங்களில் கூடுதல் விபரங்களாக வருவாய ஈட்டுபவரின் விபரங்கள், பரிந்துரைக்கப்பட்டவரின் விபரங்கள் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணிக்கு தீ-கரன் சோசியல் சர்வீஸ் சென்டர் என்ற நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் 25.11.2020ல் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 134/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 795**<br>**ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 5**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 09.07.2020ந் தேதிய கடித எண் 7220/2020/பி3 என்ற கடிதத்தில் நகராட்சியால் பராமரிக்கப்படும் பேட்டரியால் இயங்ககூடிய வாகனங்களை நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், எந்த வாகனமும் இயங்காமல் நிறுத்தி வைக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் மொத்தம் உள்ள 12 வாகனங்களில் 7 வாகனங்கள் இயங்காமலும், 5 வாகனங்களில் பழுதுகளும் உள்ளன. இதனால் இந்நகராட்சி பகுதியில் முதல் நிலை குப்பைகள் சேகரிப்பு பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட முடியாமல் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 16.11.2020 அன்று முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 664/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 796**<br>**ஏற்கப்பட்டது** |

| | பொருள் எண் 6 | தீர்மானம் எண்:- 797 |
|---|---|---|

**பொருள் எண் 6**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 27.10.2020ந் தேதிய தொலைபேசி செய்தியில் தூய்மை இந்தியா திட்டம் -2ல் 15வது மத்திய நிதிக்குழுவில் நிதி பெற்றிட திறந்தவெளி கழிப்பிடம்+மற்றும் குப்பை இல்லா நகரம் என்ற இலக்கினை அடைந்திடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி தற்போது திறந்தவெளி கழிப்பிடம் என்ற நிலையில் உள்ளது. மேற்படி திறந்தவெளி கழிப்பிடம் என்ற நிலையில் உள்ள நகராட்சிகளில் உள்ள பொது கழிப்பிடம், கட்டண கழிப்பிடம், தனி நபர் கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றினை மத்திய அரசு நேரடியாக எந்தவித முன்னறிவிப்புமின்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்நகர் பகுதியில் உள்ள மரக்கடை, புளியங்குடி, அக்கரைபுதுத்தெரு, சின்னக்கூத்தாநல்லூர், வஉசி காலனி, கோரையாறு மற்றும் காடுவெட்டித்தெரு பொது கழிப்பிடங்கள் ஆகியவற்றினை வர்ணம் பூசி சுவர்களின் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு விளம்பரங்களை வரையும் பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | திரு.ஜி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் ஓகைபேரையூர் | 1,94,500 |
| 2 | திரு.வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 1,96,000 |
| 3 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்த்தாரர் கூத்தாநல்லூர் | 1,95,000 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஜி.ரவிச்சந்திரன் ஒப்பந்த்தாரர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1051/2015/எச்1)

**தீர்மானம் எண்:- 797**

**ஏற்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 7**<br>மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் 19.10.2020ந் தேதிய கொரோனா தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் கொரோனா பற்றிய விழிப்புணர்வு, கொரோனா எவ்வாறு பரவுகிறது, அதற்கான தடுப்பு முறைகள், மற்றும் கொரோனா குறித்த செய்திகளை தெருவோர நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான வடபாதிமங்கலம் ரோடு அக்கரை புதுத்தெரு மற்றும் பாய்க்காரத் தெரு பாலம் ஆகிய இரண்டு இடங்களில் நாடக கலை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 02.04.2020ந்தேதிய கடித ந.க.எண். 3336/ஜெ2/2020-9 ல் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கான எந்த ஒரு பணிக்கும் ஒப்பந்த வழிமுறையினை பின்பற்றாமல் நேரடியாக பணி மேற்கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, எனவே இந்நகராட்சியில் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை, டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி போன்றவை குறித்து நாடகம் நடத்திய அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை தஞ்சாவூர் என்ற நாடகக் குழுவின் மூலம் இரண்டு இடங்களில் நாடகம் நடத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 18,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 20.10.2020 அன்று முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 335/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 798**<br>**ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான ஒப்பந்த நிறுவனத்தின் அனுமதிக் காலம் 30.11.2020 உடன் முடிவடைகிறது. இந்நிலையல் மேலும் மூன்றான்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்கள் கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கும் தற்போது அதிகப்படியாக தேவைப்படும் 15 நபர்களுக்கு சேர்த்து மொத்தம் 67 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகித அடிப்படையில் ஒப்பந்த முறையில் பணியமர்த்திக் கொள்ள மன்றத்தின் தீர்மான எண் 755 நாள் 31.07.2020ல் பெறப்பட்டு முன் மொழிவுகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 01.09.2020 முதல் 30.11.2020 வரை மூன்று மாத காலத்திற்கு செயல்பட்டு தற்போது ஒப்பந்த | **தீர்மானம் எண்:- 799**<br>**ஏற்கப்பட்டது** |

நிறுவனத்தின் அனுமதிக்காலம் 30.11.2020 உடன் முடிவடைந்து விட்டது. தறபோது உள்ள சூழ்நிலையில் உள்ள கொரோனா கால வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேலும் மழைகாலமாகவும் உள்ளதால் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலாததாலும் பணிகள் தங்கும் தடையின்றி மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மை 52 தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் அதே நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்திலேயே பணிகளை 01.12.2020 முதல் 28.02.2021 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினமான ரூ.18,54,768/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்த்தாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.12.2020 முதல் 28.02.2021 முடிய நீடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 9**

**தீர்மானம் எண்:- 800**
**ஏற்கப்பட்டது**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் Battery Operating Vehicle (12 Nos) பழுது நீக்கும் பணிக்கு 30.11.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை (ரூபாயில்) | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 2,10,000 | 2,09,776 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 2,17,149 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 664/2020/எச்1)

**பொருள் எண்** 10

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தற்போது இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண் TN 50 U 0518 வாகனத்திற்கான தகுதிச் சான்று 11.11.2020ல் முடிவடைந்த காரணத்தால், அதற்கான தகுதிச்சான்று பெறுவதற்கும், மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்து புதுப்பிக்கவும், பொது சுகாதார பணியின் அவசரஅவசியம் கருதி, மேற்படி காலத்திற்கான பராமரிப்பு பணிக்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/-க்கு இந்நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில் இப்பணிக்கு 12.11.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு கீழ்கண்ட இரண்டு ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 1,20,000 | 1,19,700 | 0.25% குறைப்பு |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 1,20,000 | 1,20,105 | 0.09% கூடுதல் |

இப்பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் (1)ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி என்கிற நிறுவனத்திடமிருந்து வரப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினைவிட 0.25% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண். 329/2018/எச்1)

**தீர்மானம் எண்:-** 801

**ஏற்கப்பட்டது**

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி